18.06.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.49 /2021 ) திரு.வரதராஜபெருமாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) நான் குமரெட்டியாபுரம் கிராமத்தில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் எனது தகப்பனார் காலத்திருந்தே குடியிருந்து வருகிறேன். அதனால் அங்கு குடியிருந்து வருகின்றவர்களின் உறவு முறை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் எனக்கு விவரம் தெரிந்தவரை சொல்ல முடியும். இந்த வழக்கில் வாதி, நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் கண்ட தரப்பினர்களின் உறவுமுறை விவரித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். பெருமாள் ரெட்டியார் என்பவர் வாதிகளின் தந்தை என்றால் சரிதான். சுப்பையா ஆசாரியின் தகப்பனார் பெருமாள் ஆசாரி என்றால் அது எனக்கு தெரியாது. காளியம்மாளின் கணவர் பெயர் என்னவென்றால் சுப்பையா ஆசாரி என்று சொல்லுவார்கள் நான் பார்த்ததில்லை. சுப்பையா ஆசாரியின் உடன் பிறந்தவர்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காளியம்மாளை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் சமீபமாக இறந்து போனார். காளியம்மாளுக்கு முன்பே அவரது கணவர் சுப்பையா இறந்து விட்டார் என்றால் அவரது கணவர் இறந்த விவரம் எனக்கு தெரியாது. எனது கிரையப்பத்திரத்தின் முதல் பத்திரத்தில் காளியம்மாளின் கணவர் சுப்பையா ஆசாரிக்கு கிடைக்க்பெற்று அவர் காலமான பின்னர் காளியம்மாளுக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் அதை நான் பார்க்கவில்லை. எனது கிரையப்பத்திரத்தினை என்னிடம் காண்பித்து கேட்டால் எனக்கு படிக்கத்தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களை பார்த்தால் எண்களும்,எழுத்துக்களும் தெரியாது என்றால் எண்கள் தெரியும் படிக்கத்தெரியாது. பத்திரத்தை காண்பித்து அதில்உள்ள சர்வே எண், அதிலுள்ள உட்பிரிவு எண்களை குறிப்பிட்டு கேட்டால் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.06.2026.